**கவனிக்க.-** *2014.07.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1874 - 2014 අගෝස්තු මස 01 වැනි සිකුරාදා - 2014.08.01

*1874 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1124 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1130 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1136 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1128 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஓகத்து மாதம் 8 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

இலங்கைப் புகையிரத சேவைகளுக்காக 100 மெ. தொ. PIG IRON இன் பெறுகை

பெறுகை இலக்கம் : SRS/F. 7029

இலங்கை, கொழும்பு 10, தபால் பெட்டி 355, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் 100 மெ. தொ. PIG IRON வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை நேரடியாக அல்லது தராதர அங்கீகாரம் பெற்ற அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட முகவரொருவருடாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலை மனுக்கள் 2014, செத்தெம்பர் 3 ஆந் திகதி இலங்கை நேரப்படி பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து 2014, செத்தெம்பர் 2 ஆந் திகதி இலங்கை நேரப்படி பி. ப. 3.00 மணிவரை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான இலங்கைப் பணத்தில் 2,500 ரூபாவை அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் அதற்குச் சமமான பணத்தொகையைச் செலுத்துவதன் மூலம் பெறக்கூடிய படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகளின் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகளைச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. மேலதிகமான விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும் :

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்.
த. பெ. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2473328
தொலைநகல் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பிலக்கம் SRS/F.7029

8-204

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

கேள்வி அறிவித்தல்

மருதானை புகையிரத களஞ்சியசாலையிலிருந்து வெற்று பரல்கள் மற்றும் கழிவு எண்ணெய் ஆகியவற்றை அகற்றல்

1,000 எண்ணிக்கையுள்ள வெற்று பரல்கள் மற்றும் 68,800 லீற்றர் கழிவு எண்ணெய் ஆகியவற்றை மருதானை புகையிரத களஞ்சியசாலையிலிருந்து அகற்றுவதற்காக கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

2. விலை மனுக்கள் 2014.08.15 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 2,000 ரூபாவை (இரண்டாயிரம் ரூபாவை) மாத்திரம் செலுத்திய பின்னர் 2014.08.14 ஆந் திகதி பி. ப. 3 மணிவரை கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளை மூடியதும் உடனடியாகவே கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத தலைமையகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது, விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரதத் தலைமை அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

6. கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு.- தயவு செய்து கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 94(11)2438078, 2436818 ; தொலைநகல் இல. : 94(11)2432044.

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பிலக்கம் : எஸ்ஆர்எஸ்/எப். 7132-தொகுதி I.

8-206

---

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

(இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட செயற்திட்டங்கள்)

பொது முகாமையாளர், புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10

**புகையிரத நிலையங்கள், கட்டிடங்கள் மற்றும் மேடைகளுக்கான அபிவிருத்திகள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு ஹோமாகமை புகையிரத நிலைய மேடைகள் அபிவிருத்தி வேலைகளுக்காக கொழும்பு 10, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்), தவிசாளர் அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைக் கோருகிறார். ஒப்பந்த இல. எஸ்ஆர்எஸ்/எப்-7153.

ஹோமாகமை புகையிரத நிலையத்தில் மேற்கொள்ளப்படுவதற்கான வேலையை திட்டமிடப்படல் வேண்டும். நிர்மாணக் காலம் 120 நாட்களாகும்.

2. விலைமனுக் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறைப் பிரகாரம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்பவராகவும் இருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்துடன் கட்டிட வேலைகளுக்காக விசேடத்துவத்தில் சீ5 அல்லது அதற்கு மேலான தரத்தில் மற்றும்/அல்லது மெருகூட்டல் தொழிற்பாடுகளுக்கான விசேடத்துவத்தில் எவ்1 தரத்திலும் பதிவுபெற்றிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமையைப் பெறுவதற்கான தேவைப்பாடுகள் :-

(அ) கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரித் தொகை ஆகக்குறைந்தது 200 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கடந்த 10 வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரராக இவ்வேலைகளுக்குச் சமமான மற்றும் சிக்கல் தன்மையில் ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தின் மீள் நிர்மாணம்/நிர்மாணம்.

(இ) இவ்வொப்பந்தம் தொடர்பாக ஏனைய ஒப்பந்தம் தொடர்பான கடப்பாடுகள் மற்றும் ஏதாவது பிரத்தியேகமான முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக கடன் வசதிகளின் ஆகக்குறைந்த தொகை 15 மில்லியன் ரூபாவுக்கு குறையாமலிருத்தல் வேண்டும். இது இச்செயற்திட்டத்திற்கு பிரத்தியேகமானதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) வேலைத்தளத்தில் பின்வரும் தொழில்நுட்ப பதவி நிலையினர் இருத்தல் வேண்டும் :-

(1) NDT, HNDE, NDES அல்லது சமமான தகைமையுடன் 5 வருட அனுபவமுடைய ஒரு தொழில்நுட்ப அலுவலர் ;

(2) NCT அல்லது சமமான தகைமையுடன் 3 வருட அனுபவமுடைய ஒரு வேலை மேற்பார்வையாளர்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் புகையிரத சேவைகளின் பிரதான எந்திரியிடமிருந்து (புகையிரத வழி மற்றும் வேலைகள்) பெற்று, வேலை நாட்களில் மு. ப. 9 மணியிலிருந்து பி. ப. 3 மணிவரை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

6. மீளளிக்கப்படாத கட்டணமான 3,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் 2014.07.15 ஆந் திகதியிலிருந்து 2014.08.13 ஆந் திகதி வரை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

7. 2014.08.14 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியவுடனேயே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
த. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

8. அனைத்து விலைமனுக்களும் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (1,50,000 ரூபா) பெறுமதியுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனுவை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. 2014.08.13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பிரதான எந்திரியின் (புகையிரத வழி மற்றும் வேலைகள்) அலுவலகத்தில் விலைமனு முன்கூட்டம் நடைபெறும்.

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்).

இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
த. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

8-207

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

(இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட செயற்திட்டங்கள்)

*பொது முகாமையாளர், புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10*

**புகையிரத நிலைய மேடைகளுக்கான அபிவிருத்திகள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு நுகேகொடை புகையிரத நிலைய மேடைகள் அபிவிருத்தி வேலைகளுக்காக கொழும்பு 10, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்), தவிசாளர் அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைக் கோருகிறார். ஒப்பந்த இல. எஸ்ஆர்எஸ்/எப்-7151.

நுகேகொடை புகையிரத நிலையத்தில் மேற்கொள்ளப்படுவதற்கான வேலையை திட்டமிடப்படல் வேண்டும். நிர்மாணக் காலம் 120 நாட்களாகும்.

2. விலைமனுக் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறைப் பிரகாரம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்த வெகுமதிக்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்பவராகவும் இருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்துடன் கட்டிட வேலைகளுக்காக விசேடத்துவத்தில் சீ5 அல்லது அதற்கு மேலான தரத்தில் மற்றும்/அல்லது மெருகூட்டல் தொழிற்பாடுகளுக்கான விசேடத்துவத்தில் எவ்1 தரத்திலும் பதிவுபெற்றிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்த வெகுமதிக்கான தகைமையைப் பெறுவதற்கான தேவைப்பாடுகள் :-

(அ) கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரித் தொகை ஆகக்குறைந்தது 200 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கடந்த 10 வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரராக இவ்வேலைகளுக்குச் சமமான மற்றும் சிக்கல் தன்மையில் ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தின் மீள் நிர்மாணம்/நிர்மாணம்.

(இ) இவ்வொப்பந்தம் தொடர்பாக ஏனைய ஒப்பந்தம் தொடர்பான கடப்பாடுகள் மற்றும் ஏதாவது பிரத்தியேகமான முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக கடன் வசதிகளின் ஆகக்குறைந்த தொகை 15 மில்லியன் ரூபாவுக்கு குறையாமலிருத்தல் வேண்டும். இது இச்செயற்திட்டத்திற்கு பிரத்தியேகமானதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) வேலைத்தளத்தில் பின்வரும் தொழில்நுட்ப பதவி நிலையினர் இருத்தல் வேண்டும் :-

(1) NDT, HNDE, NDES அல்லது சமமான தகைமையுடன் 5 வருட அனுபவமுடைய ஒரு தொழில்நுட்ப அலுவலர்.

(2) NCT அல்லது சமமான தகைமையுடன் 3 வருட அனுபவமுடைய ஒரு வேலை மேற்பார்வையாளர்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை புகையிரத சேவைகளின் பிரதான எந்திரியிடமிருந்து (புகையிரத வழி மற்றும் வேலைகள்) பெற்று, வேலை நாட்களில் மு. ப. 9 மணியிலிருந்து பி. ப. 3 மணிவரை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

6. மீளளிக்கப்படாத கட்டணமான 3,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் 2014.07.15 ஆந் திகதியிலிருந்து 2014.08.19 ஆந் திகதி வரை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

7. 2014.08.14 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியவுடனேயே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்).
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
த. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

8. அனைத்து விலைமனுக்களும் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (1,50,000 ரூபா) பெறுமதியுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனுவை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. 2014.08.13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பிரதான எந்திரியின் (புகையிரத வழி மற்றும் வேலைகள்) அலுவலகத்தில் விலைமனு முன்கூட்டம் நடைபெறும்.

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்).

இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
த. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

8-208

# ஆய விற்பனையும் குத்தகையும்

## நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2015

2015, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2015, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத் தவறணைகளில் சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2014, செத்தெம்பர் 03 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. தவறணையை குத்தகை வாங்க முன்வருபவர் ஏதாவதொரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திற்கோ, பிரதேச செயலகத்திற்கோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழுடன் காகித உறையிலிட்டு முத்திரை குத்தி இடப்பக்க மேல் மூலையில் தான் விலை கோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இறுதித் திகதிக்கும் நேரத்திற்கும் முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப்பிராந்திய செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்யலாம்.

3. கேள்விப்பத்திரம் நிரப்பும்போது உண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டும். இப்படியில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2014, செத்தெம்பர் 03 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப் பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் நாரம்மல பிரதேச செயலாளருக்கு உரியதாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அத்தினத்தன்று பி. ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாக செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2015 ஆம் ஆண்டிற்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2015 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

8. 2014.09.03 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2014.10.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.

9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஏ. ஆர். சுதர்ஷனீ,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2014, யூலை 09.

**அட்டவணை**

| தொடர் இல. | பகுதி | கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | நாரம்மல | 2014.09.03<br>மு. ப. 10.30 | ரூபா 1,000 | மு. ப. 11.00<br>பி.ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 |

8-32

---

## லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை - 2015

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள லுணுகலை பிரதேச செயலாளரின் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 2 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2014.08.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளத்தக்கதான குறித்த கேள்விப்பத்திரத்தினை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்றுப்பத்திரத்துடன் முகவரியிடப்பட்ட கடித உறையினுள் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும், பெயரினையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுவதன் மூலம் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்வி பத்திரப்படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2014.08.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இப்பிரதேச செயலகத்திற்கு சமுகம் தரல் வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2014.10.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்வி பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளிற்கமைவானதாகயிருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் எனப் பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் கோரப்படும் தொகையான இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகையினைச் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் தொடர்பாக மேலதிக விபரங்களை லுணுகலை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

டி. எம். எல். எச். திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2014, யூலை 10.

**லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளு தவறணை குத்தகை விற்பனை - 2015**

*(2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை)*

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் முகவரியும் | பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவில் தவறணையின் அமைவிடம் | தவறணை திறக்கப்படு கின்ற நேரம் | தவறணை மூடப்படு கின்ற நேரம் | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற கடைசித் தினமும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இல. 2-லுணுகலை | லுணுகலை | லுணுகலை பிரதேச சபை யின் வட்டார இலக்கம் 2 வரிப்பண இலக்கம் 219 கொண்ட குருவிக்கும்புரவத்த | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | ரூபா 5,000 | 2014.08.20 மு. ப. 10.30 |

மஹதோவ தோட்ட எல்லைக்குள் இரவு நேர சிற்றுண்டிச் சாலைக்கு 2014 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட முகாமையாளர் 2014.08.20 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

8-33

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மீரிகம, கண்டலமயில் வசிக்கும் ஹேமந்தி கனிஷ்கா வீரசிங்ஹ ஆகிய நான், கொழும்பு பிரசித்திபெற்ற நொத்தாரிசு திருமதி ஆர். கே. ஜயவீர என்பவரால் 2013.05.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 2331 ஆம் இலக்க விசேட அற்றோணி தத்துவத்தின் மூலம் குறிப்பிட்ட கண்டலம, மீரிகமயில் வசிக்கும் லலனி இஷாரா வீரசிங்ஹ என்பவருக்கு அதிகாரம் வழங்கிய அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து வலுவிழக்கச் செய்யப்படுவதுடன் அந்த அற்றோணி தத்துவகாரரால் செய்யப் படுகின்ற எந்தக் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது செயற்பாடுகளுக்கு இதன் பின்னர் நான் பொறுப்புதாரியல்ல எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ஹேமந்தி கனிஷ்கா வீரசிங்ஹ.

8-54/1

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மீரிகம, கண்டலமயில் வசிக்கும் ஹேமந்தி கனிஷ்கா வீரசிங்ஹ ஆகிய நான், கொழும்பு பிரசித்திபெற்ற நொத்தாரிசு திருமதி ஆர். கே. ஜயவீர என்பவரால் 2013.08.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 2363 ஆம் இலக்க விசேட அற்றோணி தத்துவத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட கண்டலம, மீரிகமயில் வசிக்கும் லலனி இஷாரா வீரசிங்ஹ என்பவருக்கு அதிகாரம் வழங்கிய அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து இல்லாமல் செய்வதாகவும், அந்த அதிகாரத்தின் மூலம் செய்யப்படுகின்ற எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கோ அல்லது செயற்பாடுகளுக்கோ நான் பொறுப்பு தாரியல்ல என்பதனையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

ஹேமந்தி கனிஷ்கா வீரசிங்ஹ.

8-54/2

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மீரிகம, கண்டலமயில் வசிக்கும் ஹேமந்தி கனிஷ்கா வீரசிங்ஹ ஆகிய என்னால், கொழும்பு பிரசித்திபெற்ற நொத்தாரிசு திருமதி ஆர். கே. ஜயவீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2330 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவத்தின் மூலம் மேற்படி கண்டலம, மீரிகமயில் வசிக்கும் லலனி இஷாரா வீரசிங்ஹ என்பவருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து வலுவிழக்கச் செய்வதாகவும், மேற்படி அற்றோணி அதிகாரத்தின் மூலம் செய்யப்படுகின்ற எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கோ அல்லது செயற்பாடுகளுக்கோ நான் பொறுப்பு தாரியல்ல என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

ஹேமந்தி கனிஷ்கா வீரசிங்ஹ.

8-54/3

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சுமணதிலக கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 97442
பதிவுசெய்யப்பட்ட திகதி : 2014.03.07
பதிவு அலுவலகம் : இல. 31/1, கந்தவத்த றோட், இரத்மலானை

தெனஹந்தி தில்ருக்ஷி சந்தோதனி த சில்வா,
கம்பனிச் செயலாளர்.

8-22

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பின்வருமாறு கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* ஆனந்த டிராமா
*கம்பனியின் பதிவு இலக்கம் :* ஜீஏ 2940
*கம்பனி பதிவு முகவரி :* இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 3

செக்ரடேரியல் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 5958.

8-67

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

| கம்பனியின் பெயர் | கம்பனியின் இலக்கம் | பதிவுசெய்யப் பட்ட விலாசம் |
|---|---|---|
| (1) ஹொலிடே பாக் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 79633 | இல. 105-1/1, ஹில் வீதி, தெஹிவளை |
| (2) ஜுவெல் லைன் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 82611 | இல. 121/10, சீ வீதி, கொழும்பு 11 |
| (3) ஏ. எம். ஏ. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 71475 | இல. 237/76, பொல் ஹேன்கொட வீதி, கொழும்பு 6 |

எச். சீ. எம். நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

8-59

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

| கம்பனியின் பெயர் | பதிவு இலக்கம் | கூட்டிணைப்புத் திகதி | பதிவுசெய்யப் பட்ட அலுவலக முகவரி |
|---|---|---|---|
| சவோன்மன்க் (பீவீரீ) எல்ரீடி | பீவீ 99394 | 2014.06.30 | இல. 93, பழைய காலி வீதி, வலன, பாணந்துறை |
| சரசி எண்ட- பிரைஸ் (பீவீரீ) எல்ரீடி | பீவீ 99470 | 2014.07.03 | இல. 316, அவிசா வளை வீதி, நாகவெல, முல்லேரியா, புதிய நகரம் |

ஆர். கே. எல். எஸ். கூட்டாண்மை
சேவைகள் (பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்.

8-197

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன :-

| கம்பனியின் பெயர் | பதிவு இலக்கம் | கூட்டிணைப்புத் திகதி | பதிவுசெய்யப் பட்ட அலுவலக முகவரி |
|---|---|---|---|
| கேரன் (பீவீரீ) எல்ரீடி | பீவீ 99489 | 2014.07.03 | இல. 34, கொரககஹ, அவெனியூ, ஹவ்லொக் வீதி, கொழும்பு 6 |
| மாஸ் என்ஜினியரிங் டெக்னொலஜி (பீவீரீ) எல்ரீடி | பீவீ 64919 | 2008.07.23 | இல. 461/ஈ, சேர்வூட் கிலேட், அரங்கல, ஹோகந்தர |

இயக்குநர் சபை.

8-198

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* பிங்க் அன்ட் யூ கிளீனிங் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம் :* பீவீ 86221
*கூட்டிணைப்புத் திகதி :* 28.05.2012
*பதிவு முகவரி :* இல. 31/1, 4 ஆம் ஒழுங்கை, கொஸ்வத்த வீதி, நாவல

பணிப்பாளர்.

8-167

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டி என் எஸ் ஹோல்டிங்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 99399
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 772, கொழும்பு வீதி, குறண, நீர்கொழும்பு

விக்கிரமசிங்ஹ ஆரச்சிகே துஷாரி கங்கா லிவேரா,
கம்பனிச் செயலாளர்கள்.

8-212

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஈடேலியன் கோமேட் எகடமி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 99006
*பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*பதிவுத் திகதி* : 09.06.2014

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-158

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எம். எஸ். ஏ. ஷம்சுடீன் டிவலொப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 99352
*பதிவு முகவரி* : இல. 15/1, பீச் வீதி, மவுன்ட்லவெனியா
*பதிவுத் திகதி* : 27.06.2014

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-157

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பிரீத் பிரீ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 99128
*பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*பதிவுத் திகதி* : 16.06.2014

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-155

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ரணவீர இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 99626
*கூட்டிணைப்புத் திகதி* : 10.07.2014
*கம்பனி பதிவு முகவரி* : இல. 313/3, ஹுனுபிட்டியாவ, நித்தம்புவ

கம்பனிப் பணிப்பாளர்.

8-200

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஈடேலியன் புட் அன்ட் பெவரேஜ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 99095
*பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*பதிவுத் திகதி* : 13.06.2014

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-156

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* இன்டர்நஷனல் டெலன்ட் டிவலொப்மென்ட் இன்ஸ்ட்டிடியூட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம் :* பீவீ 66379
*கூட்டிணைப்புத் திகதி :* 01.12.2008
*பதிவு முகவரி :* இல. 16, ஸ்ரீ தர்மகீர்த்தியார வீதி, கொழும்பு 3

ஷனில் ஃபர்னாந்து அசோஷியேட்ஸ்,
கம்பனிச் செயலாளர்-பிரிவு இல. 2002/124.

8-143

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்படும் கம்பனி 2014, யூலை மாதம் 8 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* டெல்மேஜ் விமான சேவைகள் வரையறுக்கப்பட்ட (தனியார்) நிறுவனம்
*பதிவு இலக்கம் :* பீவீ 99520
*பதிவுசெய்யப்பட்ட முகவரி :* இல. 101, வினயலங்கார மாவத்தை, கொழும்பு 10

கம்பனிச் செயலாளர்.

8-142

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* டீ ப்ளாஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 65820
*பதிவுத் திகதி :* 2008.10.08
*பதிவு முகவரி :* இல. 96/1, 'மெனிக்', உஸ்வெடகெய்யாவ

கம்பனிச் செயலாளர்கள்.

8-128

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* மெற்றோபொலிற்றன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 99428
*கூட்டிணைப்புத் திகதி :* 2014.07.01
*கம்பனியின் பதிவு முகவரி :* இல. 85, பிறேபுறூக் இடம், கொழும்பு 2

மெற்றோபொலிற்றன் ஹோல்டிங்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனிக்காகவும்
அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோர்ப்பரேட் செக்ரட்டேரியல்
(பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

8-171

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* இயூட்ரிமா ஜபோனிகா பிளாண்டேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம் :* பீவீ 99488
*கூட்டிணைப்புத் திகதி :* 04.07.2014
*பதிவு முகவரி :* இல. 19ஏ, கவர் வீதி, கொழும்பு 15

பணிப்பாளர்.

8-113

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* டிரேட்எக்செல் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்

*கூட்டிணைப்புத் திகதி* : 08.07.2014
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 99573
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 17, 2 ஆம் ஒழுங்கை, கவ்டான புரோட்வே, தெஹிவளை

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட்
சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

8-112

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனி பெயர்* : எல். ஓ. எல். சீ. லைஃப் இன்சூரன்ஸ் லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம்* : பீபி 4824
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய
*கம்பனியின் புதிய பெயர்* : எல். ஓ. எல். சீ. இன்சூரன்ஸ் ஹோல்டிங் கம்பனி லிமிட்டெட்

எல். ஓ. எல். சீ. கோர்ப்பரேட்
சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

09.07.2014.

8-110

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லிஷ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதவிலக்கம்* : பீவீ 99434
*கூட்டிணைப்புத் திகதி* : 01.07.2014
*பதிவு முகவரி* : இல. 65, மீகஹவத்த, சியாம்பலபே (மேல் மாகாணம்)

கம்பனிச் செயலாளர்கள்.

8-105

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பெலியோ (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 98358
*கூட்டிணைப்புத் திகதி* : 30.04.2014
*பதிவு முகவரி* : இல. 542/ஏ, நீர்கொழும்பு வீதி, மஹபாகே

கம்பனிச் செயலாளர்கள்.

8-104

---

## அறிவித்தல்

பீறா சின்தற்றிக் வைபர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீவீ 2153

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) இன்கீழான கலைப்பாளர் நியமனம் பற்றி பின்வருமாறு அறிவிக்கப் படுகின்றது :-

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஜீ. ஜே. டேவிட் ஆகிய நான், இல. 48, பார்க் வீதி, கொழும்பு 2 இல் அமைந்துள்ள பார்க்வே கட்டிடத்தின் 3 ஆம் மாடியில் உள்ள பீறா சிற்தற்றிக் வைபர் (பிறைவேட்) லிமிட்டெட்டின் 2014, ஆடி மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற அதிவிசேட பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மேற்படி கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

ஜீ. ஜே. டேவிட்,
பீறா சின்தற்றிக் வைபர் (பிறைவேட்) லிமிட்டெட்,
கலைப்பாளர்.

மே./பா., எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரீஸ்டரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4,
16.07.2014.

8-180/1

## அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

பீறா சின்தற்றிக் வைபர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீவீ 2153

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2014 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1) (பி) இன்கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் 2014 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வை. செல்வராஜ்,
பி. டி. பீ. டி. பெரேரா,
கே. ஏ. அமரசிங்க,
பணிப்பாளர்கள்.

2014, ஆடி 16.

8-180/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

| கம்பனியின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுசெய்யப் பட்ட முகவரி |
|---|---|---|
| ரீ சிப் இன்வெஸ்ட்-மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98452 | செக்ரடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| அமிஜோ பீச் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98983 | செக்ரடேரியல் ஹவுஸ் அட்வைசரி (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| எம் ஜே ஸ்விப்ட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99040 | செக்ரடேரியல் ஹவுஸ் அட்வைசரி (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| ஸ்விவ்ற் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99168 | செக்ரடேரியல் ஹவுஸ் அட்வைசரி (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| குட் வியூ றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99198 | இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| போல்ட்றிக் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99222 | செக்ரடேரியல் ஹவுஸ் அட்வைசரி (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| எலைட் சிஸ்ரம்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99385 | இல. 62, பொறால வீதி, வெலிகம |
| கொவபன்கா (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 99551 | செக்ரடேரியல் ஹவுஸ் அட்வைசரி (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |

செக்ரடேரியல் ஹவுஸ் அட்வைசரி
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

8-159

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கேகாலை மாவட்டம், மாவனல்லை, தெஹிமடுவ, வேரகல வீதி, இலக்கம் 48/2 இல் வதியும் 555443579V ஆம் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையைக் கொண்டுள்ள அலவத்துகொடகே சுமனா பியசீலி ஆகிய நான் கமனீ குமாரி மேகசூரிய பிரசித்த நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்திய 2839 ஆம் இலக்கமும் 2012.11.14 ஆந் திகதியும் கொண்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரம் மூலம் எனது அற்றோணி தத்துவக்காரராக மாவனல்லை, கப்பாகொட, மூன்றாம் ஒழுங்கையில் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 627613598V ஐக் கொண்டுள்ள அலவத்துகொடகே சுனந்தா சந்திரசீலி என்பவரை நியமித்துக் கொண்டதுடன் மேற்படி விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தமையை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் குடிமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

அலவத்துகொடகே சுமனா பியசீலி.

8-148

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பன்னிப்பிட்டிய, ருக்மல்கம், இலக்கம் 13, ஏ/145 ஐ வசிப்பிடமாகக் கொண்டவரும் 666530535V ஆம் இலக்க தே. அ. அட்டையைக் கொண்டவருமான வெலிக்கட லியனாராய்ச்சிலகே ஜுனி திரேசா பெரேரா ஆகிய நான், இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவது யாதெனில், 430372394 V ஆம் இலக்கம் கொண்ட தே. அ. அட்டையைக் கொண்டவரும் நீர்கொழும்பு, பிட்டிபன, இலக்கம் 715/1 ஐ வதிவிடமாகக் கொண்ட திரு. காசி லியனகே கேப்பிரியல் டைடஸ் ஃபர்னாந்து 2003, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய பொது அற்றோணித் தத்துவம் மூலம் நியமனம் பெற்றமை 2014.07.08 ஆந் திகதியில் இருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

வெலிக்கட லியனாராய்ச்சிலகே ஜுனி திரேசா பெரேரா.

8-119

## ஏல விற்பனைகள்

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – நகரக் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

அட்டவணை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து ஏவகம கோரளையில் கடுவெல பிரதேச சபை எல்லைக்குள் பத்தரமுல்ல கிளை அலுவலக எல்லையில் தலங்கம தெற்கு கிராமத்தில் கட்டிட இலக்கம் 65/21, மாதுனண்துவத்த வீதியில் அமைந்துள்ள தெலகாவத்த, அலுபோகலன்த, பட்டலதெணியகல, பட்டலபட்டல வட்டதெனிய, புண்வெலகொடகெல, ஒரகாமண்டியகெல ஒரகாவத்த, நுககாவத்த, அலுபோகாதெனிய மற்றும் அலுபோகா தெனிய ஓவிட்ட தற்சமயம் சென் தோமஸ் எஸ்ட்டேட் பகுதி என்ற (நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்கவின் 1993.11.25 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் லொட் ICI என்ற காணி மீண்டும் அளந்து நிலஅளவையாளர் ஜே. ஆர். அலககோன் அவர்களால் 2005.08.11 ஆந் திகதிய வரைபட இலக்கம் 1462 இல் காண்பிக்கப் பட்ட லொட் 9 என்ற பகுதிபடுத்திய காணித்துண்டு. இக்காணியில் உள்ள கட்டிடம், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 10.00பே.)**

**மற்றும் சென். தோமஸ் எஸ்ட்டேட் காணியின் பகுதியாவன :**

**(லொட் 14 - 0ஏ. 0றூ. 23.76பே.)**
**(லொட் 1சீ3 - 0ஏ. 0றூ. 1.5பே.)**
**(லொட் 1பி - 0ஏ. 0றூ. 1.5பே.)**
**(லொட் ஏ9 - 0ஏ. 1றூ. 1.5பே.)**
**(லொட் ஏ5பி - 0ஏ. 1றூ. 2.6பே.)**

**மேற்கூறிய காணிகளின் பாதைகளும்.**

கிணிகே நளின் ரவீன்தர பெர்னாண்டோ கடன் எடுத்தவர் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.

என்னால் மேற்சொல்லப்பட்ட காணியை அதே இடத்தில் 2014, ஓகத்து 22 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2013.11.29 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2014.08.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.08.04 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.-** பத்தரமுல்ல நகர மத்தியில் இருந்து தலவத்துகொட வீதியில் குமாரகேவத்த சந்திவரை சென்று இந்த குமாரகேவத்த வீதியில் 300 மீற்றர் சென்று மாகுருந்துவத்த வீதி வரை சென்று பிறகு இந்த ஆதன இல. 65/21 கே-மாகுருந்துவத்த (சிலிங்கோ ஹவுசிங் தொகுதி) தலங்கம தெற்கில் உள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.-** வெற்றி பெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) வெட் வரி.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது நகர கிளையில் செலுத்த வேண்டும்.

*வேறு விபரங்களுக்காக.-* முகாமையாளர் (அறவீடுகள்), கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன், இல. 21, சேர். ராசிக் பரீட் மாவத்தை கொழும்பு 1. தொலைபேசி இல. : 011-2486770 ; தொலைநகல் இல. : 011-2347717.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011- 2445393.

8-135

---

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – மாதம்பே கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலகம், பெமினிகல்லை கிராம அலுவலர் பிரிவு, மெத்தேகெட்டிய கோறளை, கட்டுகம்பளை ஹத்பற்று, குளியாப்பிட்டி பிரதேச சபையின் எல்லைகளுக்குள் பெமினிகல்லை கிராமத்தில் அமைந்துள்ளதும், "லொலுவாகொடைஹேன் யாய" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பிரேமரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு, 2013, மாச்சு 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2013/83 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. 2ஏ என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 10ஏ. 0றூ. 21.7பே.)**

(கடப்பாடுடையவர்களான ஏ. காமினி டீ சில்வா மற்றும் ஏ. ஜே. ஹர்சனி டீ சில்வா ஆகியோரிற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.-** குளியாப்பிட்டி நகரிலிருந்து குருநாகல் பிரதான வீதி வழியே உன்னலீய சந்தியிலுள்ள 31 ஆவது மைல் கல் வரை ஏறக்குறைய 8 1/2 கிலோ மீற்றர் தூரம் சென்று, அச்சந்தியில் அனுக்கனே வீதிக்கு (தாரிடப்பட்ட வீதி) இடப்பக்கம் திரும்பி, இவ்வீதி வழியே சிறிபுர சந்திவரை ஏறக்குறைய 2.2 கிலோ மீற்றர் சென்று, அதன் பின்னர் அரைவாசி தாரிடப்பட்டும் மண்ணுமான வீதிக்கு வலப்பக்கம் திரும்பி, மேலும் ஏறக்குறைய 1 3/4 கிலோ மீற்றர் செல்ல விற்பனைக்குரிய இவ்வாதனம் வீதியை எல்லையாகக் கொண்டு வீதிக்கு இடப்பக்கத்தில் இருக்கின்றது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2014, ஒகத்து 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

**தீர்மான அறிவித்தலுக்கு.-** 2014, யூன் 6 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014, யூன் 11 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" மற்றும் "டெயிலி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க., உதவிப் பொது முகாமையாளர்-அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623.
தொலைநகல் இல. : 011- 2856013.

8-191

---

**டீஎப்சீசீ வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துகள் பகிரங்க ஏல விற்பனை**

**696 மற்றும் 15326 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்**

**சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரளே, கீரவெலி பற்று, வரக்காபொல நகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட பிலந்துவ கிராமத்தில் அமைந்துள்ள அம்பலன் ஓவிட்டவத்த வெல்லகமவத்த மற்றும் வெலகெலியே பஹலவத்த என அழைக்கப் படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டீ. மொல்லிகொட அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆந்**

**திகதியிடப்பட்ட 5110 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு, அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 10பே.)**

**மேலே குறிப்பிடப்பட்ட காணித்துண்டானது, உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். ஏ. சந்திரரத்ன அவர்களால் வரையப்பட்ட 1982 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதியிடப்பட்ட 1636 ஆம் இலக்க வரைபடத்தின் மீள் அளவை செய்யப்பட்டதாகும்.**

*(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ஐ. எம். என். கே. இலங்கன்திலக அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட 696 ஆம் இலக்க பிணை உறுதி மற்றும் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. வந்துராகல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 15326 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த என்(பீவீஎஸ்) 19620 ஆம் இலக்கத்தில் இல. 356, அம்பேபுஸ்ஸ, வரக்காபொல என்னுமிடத்தில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள (இதன் பின்னர் 'நிறுவனம்' என அழைக்கப்படும்) வரையறுக்கப்பட்ட எச் கே பெலின் அன்ட் சன்ஸ் (தனியார்) நிறுவனத்தினால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முறையே மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 75,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
122 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

8-185

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 74133382

திரு. மஹேஸ் பிரசன்ன பின்தெனிய மற்றும் திருமதி மாதம்பகே தொன் துல்சிறியாணி மாதம்பகே ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.10.04 ஆந் திகதிய 1827 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2013.09.23 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்" மற்றும் "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்தின் ஏலதாரர் 2014.09.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, கங்கபட பற்றுவில், கிராம அலுவலர் பிரிவு இல. 410/C வாகர மற்றும்

கிரிந்திவெல பிரதேச செயலாளர் பிரிவில் தொம்பே பிரதேச சபை எல்லைகளுள் லுனுகமயில் அமைந்த ''ரதாவலலந்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ரீ. பீ. ஆர். அஹுங்கம்மன தயாரித்த 1999, ஏப்பிறல் 01 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 91A/ 1999 இல் விபரித்த துண்டு '4' என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : பிரதேச சபை ரோட்டும் ; கிழக்கு : துண்டு 5 உம் ; தெற்கு : துண்டு 6 உம் ; மேற்கு : துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 91A/1999 இன்படி பதினாறு பேர்ச்சு (0ஏ. 0றூ. 16பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் D 451/291 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட லுனுகமயில் அமைந்த ''ரதாவலலந்த'' என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 91A/1999 இல் விபரித்த துண்டு '5' என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : பிரதேச சபை ரோட்டும் ; கிழக்கு : வரைபடம் இல. 755 இல் துண்டு A உம் ; தெற்கு : துண்டு 6 உம் ; மேற்கு : துண்டு 4 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 91A/ 1999 இன்படி பதினாறு பேர்ச்சு (0ஏ. 0றூ. 16பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் D 451/262 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் வரைபடம் இல. 91A/ 1999 இல் துண்டு 3 என அடையாளமிட்ட பாதை ஒதுக்கம் நெடுகவும் மற்றும் வழி மீதான உரிமையும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச். எம். சரத் குமார,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹன்வெல்ல.

8-177

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

நடைமுறைக் கணக்கு இல. : 6533385

சுப்பர்கொம் கொம்பியூட்டர் சிஸ்டம் நிறுவனம் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை (பங்காளர்கள் : திரு. நெலிகமகே சரத் தம்மிக பெரேரா, திரு. நெலிகமகே தயாசிரி பந்து பெரேரா ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.06.13 ஆந் திகதிய 1867 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2014.05.29 ஆந் திகதி வியாழக்கிழமைய ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'' மற்றும் ''தினமின'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன 2014.08.23 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுள் (வேதெர உப அலுவலகம்) சல்பிட்டி கோறளை உடுகஹ பற்றுவில் சித்தமுல்லை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 591 இல் அமைந்த ''தானாயம்கொடல்ல மூகலான'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சிறிசேன தயாரித்த 1999, மாச்சு 20 ஆந் திகதியிட்ட வரைபட இல. 337 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : வரைபடம் இல. 335 இல் துண்டு 19 உம் (உறுதியின் படி வரைபடம் இல. 335 இல் துண்டு 20) ; கிழக்கு : துண்டு 2 உம் ; தெற்கு : எஸ். தர்மசிறி தேவஹெட்டிகேவுக்கு சொந்தமான காணியும் C (உறுதியின் படி எஸ். தர்மசிறி தேவஹெட்டிகேர) ; மேற்கு : பிரதான பாதையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 337 இன் படி இருபத்தொரு பேர்ச்சு (0ஏ. 0றூ. 21பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் N 394/75 இல் பதிவு செய்யப்பட்டது.

#### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட சித்தமுல்லையில் அமைந்த ''தானாயம் கொடல்ல மூகலான'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் வை. எம். பி. பீ. கருணாசுந்தர தயாரித்த 1977, சனவரி 11 ஆந் திகதியிட்ட வரைபட இல. 335 இல் விபரித்த துண்டு 20 (20 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப் பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : டி. ரூபனின் வாரிசுகளின் காணியும் துண்டுகள் 7, 8, 11, 12, 15 மற்றும் 21 உம் ; கிழக்கு : துண்டு 19 உம் (ரோட்) ; தெற்கு : துண்டுகள் 1 தொடக்கம் 6 உம் துண்டுகள் 6,9, 10, 13, 14, 17 உம் ; மேற்கு : மாம்பேயிலிருந்து கொட்டாவ வரை பிரதான ரோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 335 இன்படி ஒரு றூட் பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சு (0ஏ. 1றூ. 13.5பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் N 348/241 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பி. கே. குருசிங்ஹ,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மஹரகம,
2014, யூன் 30.

8-176

**சம்பத் வங்கி பீ எல் சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

அம்மில ஒட்டோ எண்ட்டர்பிரைசஸ் - கணக்கு இல. 0017 1000 9399

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014.05.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2014.07.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2014.06.30 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, நான்கு கோடியே தொண்ணூற்றொரு இலட்சத்து நாற்பத்திநான்காயிரத்து எண்ணூற்றித்தொண்ணூறு ரூபா எண்பது சதம் (ரூ. 4,91,44,890.80) 2014, மே 21 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை நான்கு கோடியே நாற்பத்தாறு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா (ரூ. 4,46,80,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து வீதம் (15.5%), மேலும் பதினான்கு இலட்சத்து முப்பத்தோராயிரத்து தொளாயிரத்திருபத்தொன்பது ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 14,31,929.69) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2014.08.26 ஆந் திகதி லொட் ஏ வரைபட இல. 4158ஏ மு. ப. 10.30 மணிக்கும், லொட் பி வரைபட இல. 4158ஏ மு. ப. 10.45 மணிக்கும் அதே இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை பல்லே பத்துவின் தெஹிவளை - கல்கிசை நகர சபை எல்லைகளுக்குள் கரகம்பிட்டியவில் அமைந்த ''தெல்காஹாவத்த மற்றும் ஹேவாகேவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பீ. தொடன்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, திசெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 4158A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் A ; கிழக்கு : கரகம்பிட்டி குறுக்கு வீதி ; தெற்கு : சார் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 160/1 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. சிவசுந்தரம் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 697 எனும் வரைபடத்தில் லொட் 1 மற்றும் பாதை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்தொன்பது தசம் சைபர் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 19.07பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4158A எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட வரைபட இல. 4158A இல் குறிப்பிடப்பட்ட லொட் B கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற்கூறப்பட்ட கரகம்பிட்டியவில் அமைந்த ''தெல்காஹாவத்த மற்றும் ஹேவாகேவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பீ. தொடன்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, திசெம்பா 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 4158 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் A ; கிழக்கு : கரகம்பிட்டி குறுக்கு வீதி ; தெற்கு : சார் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 160/1 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் மேற்கு : பாதை மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. சிவசுந்தரம் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 697 எனும் வரைபடத்தில் லொட் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்திரண்டு தசம் ஒன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 22.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4158 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் F05/283 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிணை உறுதி இல. 1449 இன் மீது பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை பல்லே பத்துவின் தெஹிவளை - கல்கிசை மாநகர சபை எல்லைகளுக்குள் கரகம்பிட்டியவில் அமைந்த ''தெல்காஹாவத்த மற்றும் ஹேவாகேவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பீ. தொடன்வெல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, திசெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 4158A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : சார் பாரொன் ஜயதிலக்க மாவத்தை, ; கிழக்கு : கரகம்பிட்டி குறுக்கு வீதி ; தெற்கு : லொட் B மற்றும் மேற்கு : பாதை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்திரண்டு தசம் இரண்டு சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 22.20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4158A எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் F05/281 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிணையுறுதி இல. 1451 இன் மீது பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-194/1

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

என்த்தன் ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் - கணக்கு இல. 0009 1000 5669

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2013.01.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2013.03.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2013.02.18 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஐந்து கோடியே முப்பத்தொரு இலட்சத்து ஐம்பத்துமூவாயிரத்து முன்னூற்றைம்பத்தைந்து ரூபா ஐம்பத்துநான்கு சதம் (ரூ. 5,31,53,355.54) 2012, நவெம்பர் 8 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை நான்கு கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சத்து தொண்ணூற்றொன்பதினாயிரத்து தொளாயிரத்துநாற்பத்திரண்டு ரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 4,99,99,942.63) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2014.08.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மற்றும் நகரசபை எல்லைகளுக்குள், கொச்சிக்கடை, தெற்கு வோட் இல. 19, பழைய சோனகத்தெருவில், வரிமதிப்பீட்டு இல. 193, (ஒரு பகுதி) உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ். எச். பி. ஜோசம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, திசெம்பர் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 62/84 காணித்துண்டின் உப பிரிவாகவுள்ள மீள் அளவீடு செய்யப்பட்ட காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. சின்னத்தம்பி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, நவெம்பர் 7 ஆந் திகதியிடப்பட்ட இல. 4746 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடக்கு : புதிய சோனகத்தெரு வரிமதிப்பீட்டு இல. 216 ஐ ஏற்ற வளவு; கிழக்கு : இங்கமைந்த லொட் V ; தெற்கு : பழைய சோனகத்தெரு ; மற்றும் மேற்கு : பழைய சோனகத்தெரு வரிமதிப்பீட்டு இல. 189 ஐ ஏற்ற வளவு ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒன்பது தசம் ஐந்து ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 9.56பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 4746 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 1116/228 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-194/2

---

**யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கேற்ப விற்பனை அறிவித்தல்*

**கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் எருவில்பற்றுவில் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஈஸ்ரேண் சீற்றன் எஸ்டேட்/குறூப் எனப்படும் பிரிக்கப்பட்ட காணி ஏல விற்பனை**

**ஒரு ஏக்கர் பரப்புள்ள (1ஏ. 0றூ. 0பே.) காணிப்பகுதி மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துப் பொருட்களுடன் சேர்த்து. இந்தக் காணி எச்152/208 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**மேற்கூறப்பட்ட அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ராஜேந்திரனால் வரைந்து தயாரிக்கப்பட்ட இல. ஆர்/010/2011 மற்றும் 2011.01.03 ஆந் திகதியிடப்பட்ட படவரைபுத் திட்டத்தில் கீழ்க்குறிப்பிட்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.**

**கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் எருவில் பற்றுவில் மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மண்முனை தெற்கு, எருவில்பற்று பிரதேச சபை எல்லைக்குள் களுவாஞ்சிக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஈஸ்ரேன் சீற்றன் என்னும் பெயருடைய பிரிக்கப்பட்ட காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ராஜேந்திரனால் வரைந்து தயாரிக்கப்பட்ட ஆர்/010/2011 ஆம் இலக்க 2011.01.03 ஆந் திகதியிடப்பட்ட படவரைபில் காட்டப்பட்ட காணி- ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) அல்லது 0.4047 ஹெக்டெயர் பரப்புள்ள காணி, கட்டிடங்கள், கிணறு மற்றும் அதற்குரிய அனைத்துப் பொருட்களுடன் சேர்ந்தது.**

மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு வீ. கனகரத்தினத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 5091 ஆம் இலக்க 2011.09.21 ஆந் திகதியிடப்பட்ட பிரதான ஈட்டுமுறி மூலம் அதில் மேற்படி அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்ட உரிமைகள், ஆதனத்தை அதைச் சேர்ந்த ''வரதராஜா ரோஹினி'' என்னும் நபர் கடப்பாடுடையவராக/ஈடுவைப்பாளராக கொழும்பு 3, காலி வீதி, இல. 64 இல் யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் பெயருக்கு ஈட்டுக்கான பிணையாக வைத்துள்ள ஈட்டுமுறி மூலம் பெற்ற வசதிகளுக்காக கொடுக்கவேண்டிய கொடுப்பனவு கூறப்பட்ட வரதராஜா ரோஹினியால் கைவிடப்பட்டதால் யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2014, ஒகத்து 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சம்பந்தப்பட்ட ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் எம்மால் விற்பனை செய்யப்படவுள்ளது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** மட்டக்களப்பு யூனியன் வங்கியிலிருந்து திருகோணமலை வீதி வழியாக சுமார் 1/2 கிலோ மீற்றர் பயணம் செய்து இடது பக்கம் உள்ள பார் வீதி மற்றும் கல்முனை வீதி வழியாக 26 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து களுவாஞ்சிக்குடி நீர்ப்பாசனத் திணைக்களத்தைக் கடந்து பன்சலை வரை சென்று வலது பக்கம் உள்ள கிரவல் பாதையில் சுமார் 30 மீற்றர்கள் சென்று சக்தி இல்லம் வீதிச் சந்திக்கு அருகில் உள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** கொள்வனவு முயற்சியில் வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத் தொகை யினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் நூறு வீதம் (100%) ;
(5) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;
(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி தொண்ணூறு வீதம் (90%) யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 077-3181891.

8-192

---

## யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கேற்ப விற்பனை அறிவித்தல்

**கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப் பற்றுவில் பாசிக்குடா கிராமத்தில் அமைந்துள்ள கருங்கலிச்சோலை காணியின் பகுதி இரண்டு றூட் விஸ்தீரணமுள்ள (0ஏ. 2றூ. 0பே.) காணிப்பகுதி. இந்தக் காணி ஜீ258/55 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

**மேற்கூறப்பட்ட அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள காணி, நிலஅளவையாளர் ரீ. இளவரசுவால் தயாரிக்கப்பட்ட 2011.07.15 ஆந் திகதியிடப்பட்ட இல. ஈ/155/2011 படவரைபில் கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.**

**கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கோரளைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் பாசிக்குடா கிராமத்தில், பாசிக்குடா வீதியில் கருங்கலிச்சோலை காணியின் பகுதி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. இளவரசுவால் வரையப்பட்ட 2011.07.15 ஆந் திகதியிடப்பட்ட இல. ஈ/155/2011 படவரைபில் காட்டப்பட்ட காணி- பரப்பளவு இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) அல்லது 0.202343 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ள காணிப்பகுதி மற்றும் அதற்குரிய அனைத்துப் பொருட்களும்**

மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு வேதவனம் கனகரத்தினத்தால் உறுதிப்படுத்தப்பட்ட 5022 ஆம் இலக்க 2011.08.29 ஆந் திகதியிடப்பட்ட பிரதான ஈட்டுமுறி மற்றும் 5136 ஆம் இலக்க 2011.10.05 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாவது ஈட்டுமுறி மூலம் இதில் மேற்படி அட்டவணையில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள உரிமைகள், ஆதனம் மற்றும் அதனுடன் சேர்ந்த வர்த்தகப் பெயர் பதிவுசெய்யப்படும் கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப இல. டீஎஸ்/எம்என்/சீ/பீஆர் 992 இன் கீழ் விதிமுறைப்படி பதிவுசெய்யப்பட்ட பெனால் கொன்ஸ்றக்ஸன் என்ற பெயர் வழி மற்றும் அமைப்பின்கீழ் ஏக உரிமை வியாபாரத்தை நடாத்தும் நபர் கடப்பாடு உள்ளவராக/ஈடுவைப்பாளராக கொழும்பு 3, காலி வீதி, இல. 64 இல் யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் பெயருக்கு ஈட்டுப் பிணையாக வைத்து ஈட்டுமுறி மூலம் வழங்கப்பட்ட அதிலுள்ள வசதிகளுக்காக கொடுக்கவேண்டிய கொடுப்பனவை அதிலுள்ள ''பெஞ்சமின் ஜயகுலேந்திரன்'' கைவிட்டதால் யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2014, ஓகத்து 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் எம்மால் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** கொழும்பு-குருநாகல், தம்புள்ள-ஹபரணை வீதி வழியாக சுமார் 286 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து கிரான் நகரத்தில் கும்புரமுலைச் சந்தியில் வலது பக்கம் திரும்பி பிரதேச சபை வீதியில் சுமார் 5 1/2 கிலோ மீற்றர் சென்று கல்குடா சந்தியை அடைந்து அங்கிருந்து பிரதேச சபை வீதியில் 500 மீற்றர்கள் சென்று இடது பக்கத்திலுள்ள தனிப்பட்ட பாதையில் திரும்பி மேலும் 150 மீற்றர்கள் சென்று வலது பக்கம் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை காசாக ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;

(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;

(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;

(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் நூறு வீதம் (100%) ;

(5) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;

(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி தொண்ணூறு வீதம் (90%) யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 077-3181891.

8-193

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்ரரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2014 |
| | | வெள்ளி | 08.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2014 |
| | | வெள்ளி | 15.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2014 |
| | | வெள்ளி | 22.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2014 |
| | | வெள்ளி | 29.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2014 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2014 |
| | | வெள்ளி | 12.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2014 |
| | | வெள்ளி | 19.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2014 |
| | | வெள்ளி | 26.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2014 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2014 |
| | | வெள்ளி | 10.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2014 |
| | | வெள்ளி | 17.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2014 |
| | | வெள்ளி | 24.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2014 |
| | | வெள்ளி | 31.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.